நியூ சவுத் வேல்ஸ் தமிழ்ப் பாடசாலைகள் கூட்டமைப்பு

# கலாநிதி வேந்தனார் இளங்கோ ஞாபகார்த்த தமிழ்ப் புலமைச் சான்றிதழ்ப் பரீட்சை

## தரம் : தொடக்கநிலை

**November 2005**

வினாக்கள் : 40

வழங்கப்பட்ட நேரம் : 60 நிமிடங்கள்

**உங்கள் பதில்களை தரப்பட்ட விடைத்தாள்களில் குறியிடுக.**

பெயர் : ______________________________

அடையாள இலக்கம் :

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | |

For questions 1 to 3, choose the word(s) that best describe the action shown in the picture.
1 முதல் 3 வரையுள்ள வினாக்களுக்கு அருகில் உள்ள படத்தில் நடக்கும் செய்கையைச் சரியாகக் குறிக்கும் சொல்லை (சொற்களை) தெரிவுசெய்க.



1. இவர்

(a) சிரிக்கிறார்
(b) பாடுகிறார்
(c) எழுதுகிறார்
(d) அழுகிறார்



2. இவர்கள்

(a) ஓடிச் செல்கிறார்கள்
(b) ஓடத்தில் செல்கிறார்கள்
(c) தண்ணீரில் நீந்திச் செல்கிறார்கள்
(d) ஓடத்தை தூக்குகிறார்கள்



3. இவள்

(a) பூ பறிக்கிறாள்
(b) மரம் வெட்டுகிறாள்
(c) மரம் நடுகிறாள்
(d) மரத்திற்கு தண்ணீர் விடுகிறாள்

Read and understand the Poem ‘‘புத்தியுள்ள காகம்‘‘ and answer the questions 4 to 7.

‘‘புத்தியுள்ள காகம்’’ என்ற பாடலை வாசித்து அவற்றில் இருந்து பெறப்படும் தகவல்களைக் கொண்டு 4 முதல் 7 வரையுள்ள வினாக்களுக்கு விடையளிக்கவும்.

## புத்தியுள்ள காகம்

காகம் ஒன்று ஊரிலே
தாகத்தினால் தவித்ததே

குடத்தில் நீரைக் கண்டது
தண்ணீர் அடியில் இருந்தது

சின்ன சின்னக் கற்களைக்
கொண்டு வந்து போட்டது

தண்ணீர் மேலே வந்தது
தாகம் தீரக் குடித்தது

| | |
|---|---|
| 4. காகத்திற்கு என்ன வேண்டும்?<br>(a) குடம்<br>(b) தண்ணீர்<br>(c) உணவு<br>(d) எதுவும் இல்லை | 5. எவ்வளவு தண்ணீர் குடத்தில் இருந்தது?<br>(a) குடத்தில் நிறைய<br>(b) குடத்தில் மேலே<br>(c) குடத்தில் தண்ணீர் இருக்கவில்லை<br>(d) குடத்தின் அடியில் |
| 6. தண்ணீர் எப்படி மேலே வந்தது?<br>(a) குடம் சரிந்ததால்<br>(b) கற்கள் போட்டதால்<br>(c) தண்ணீர் விட்டதால்<br>(d) மழை பெய்ததால் | 7. காகம் ஏன் தண்ணீரைத் தேடியது?<br>(a) தாகமாக இருந்ததால்<br>(b) குளிர்மையாக இருந்ததால்<br>(c) பசி எடுத்ததால்<br>(d) மயக்கம் வந்ததால் |

அடுத்த பக்கத்தில் தொடரும்.

For questions 8 and 9 choose the word that is spelt incorrectly in the given sentence.

8 ஆம், 9ஆம் வினாக்களுக்குத் தரப்பட்ட வசனத்திலே பிழையாக எழுதப்பட்டுள்ள சொல்லினைக் காட்டுக.

8. எங்களுக்கு நன்றாக விலையாட விருப்பம்.

(a) விருப்பம்
(b) விலையாட
(c) நன்றாக
(d) எங்களுக்கு

9. நான் காலையில் பல் துலக்கி முகம் கறுவுவேன்.

(a) காலையில்
(b) துலக்கி
(c) முகம்
(d) கறுவுவேன்

For questions 10 and 11 choose the correct spelling of the underlined word that is spelt incorrectly in the given sentence.

10ஆம், 11ஆம் வினாக்களுக்குத் தரப்பட்ட வசனத்தில் கோடிட்டுக் காட்டப்பட்டுள்ள சொல் பிழையாக எழுதப்பட்டுள்ளது. அதற்குரிய சரியான சொல் எது?

10. மரத்தில் இலைகள் <u>பசையாக</u> இருக்கின்றன.

(a) பாசியாக
(b) பச்சையாக
(c) இசையாக
(d) பசியாக

11. நான் <u>சணிக்கிழமைகளில்</u> தமிழ்ப் பாடசாலைக்குச் செல்வேன்.

(a) சனிக்கிளமைகளில்
(b) சாணிக்கிழமைகளில்
(c) சனிக்கிழமைகளில்
(d) செவ்வாய்க்கிளமைகளில்

Look at the picture carefully and answer questions 12 to 13.
படத்தைக் கவனமாகப் பார்த்து 12 முதல் 13 வரையுள்ள வினாக்களுக்கு விடையளிக்கவும்.



12. எது சரி?

(a) புத்தகம் கைக்குள் இருக்கிறது.
(b) புத்தகம் கையில் இருக்கிறது.
(c) புத்தகம் கையால் இருக்கிறது.
(d) புத்தகம் கையினால் இருக்கிறது.

13. எது சரி?

(a) மனிதர் புத்தகத்தினால் வாசிக்கிறார்.
(b) மனிதர் புத்தகத்துள் வாசிக்கிறார்.
(c) மனிதர் புத்தகத்தை வாசிக்கிறார்.
(d) மனிதர் புத்தகம் அருகே வாசிக்கிறார்.

Look at the picture carefully and answer questions 14 to 15.
படத்தைக் கவனமாகப் பார்த்து 14 முதல் 15 வரையுள்ள வினாக்களுக்கு விடையளிக்கவும்.



14. எது சரி?
(a) இவர் பெண்ணோடு கேள்வி கேட்கிறார்.
(b) இவர் பெண்ணிடம் கேள்வி கேட்கிறார்.
(c) இவர் பெண்ணிலிருந்து கேள்வி கேட்கிறார்.
(d) இவர் பெண்ணில் கேள்வி கேட்கிறார்.

15. எது சரி?
(a) இவர் மேசையிலிருந்து நிற்கிறார்.
(b) இவர் மேசையினால் நிற்கிறார்.
(c) இவர் மேசையருகே நிற்கிறார்.
(d) இவர் மேசைக்குள் நிற்கிறார்.

For questions 16 to 18 choose the best word for each space.
16 முதல் 18 வரையுள்ள வினாக்களுக்கு ஒவ்வொரு இடைவெளிக்கும் மிகவும் பொருத்தமான சொல்லைத் தெரிவுசெய்க.

16. மல்லிகை, தாமரை, செவ்வந்தி என்பன ______________________ .
(a) பழங்கள்
(b) காய்கள்
(c) நிறங்கள்
(d) பூக்கள்

17. தை, சித்திரை, ஆவணி, புரட்டாதி என்பன ______________________ .
(a) கிழமைகள்
(b) மாதங்கள்
(c) வருடங்கள்
(d) விரதங்கள்

18. மா, வாழை, திராட்சை, அன்னாசி என்பன ______________________ .
(a) மிருகங்கள்
(b) பூக்கள்
(c) பழங்கள்
(d) வீட்டுப் பொருட்கள்

For questions 19 to 21 choose the word(s) that has (have) the closest meaning to the underlined word(s).
19 முதல் 21 வரையுள்ள வினாக்களில் கோடிட்ட சொல்லுக்கு (சொற்களுக்கு) மிகப் பொருத்தமான சொல்லை (சொற்களை) காட்டுக.

| | |
|---|---|
| 19. மாணவர்கள் எல்லாரும் இருக்கையில் அமர்ந்தார்கள்.<br>(a) அடித்தார்கள்<br>(b) உட்கார்ந்தார்கள்<br>(c) உட் கொண்டார்கள்<br>(d) எழுந்தார்கள் | 20. சந்திரன் மேகத்தில் மறைந்தது.<br>(a) மறுத்தது<br>(b) மிதந்தது<br>(c) கலந்தது<br>(d) தெரியாமல் போனது |
| 21. நெஞ்சு வலியால் துடித்த மனிதருக்கு வைத்தியர் மாத்திரை கொடுத்தார்.<br>(a) நோவினால்<br>(b) அடியால்<br>(c) காயத்தால்<br>(d) கிலியால் | |

For questions 22 to 24 choose the word that is opposite in meaning to the underlined word.
22 முதல் 24 வரையுள்ள வினாக்களில் கோடிட்ட சொல்லுக்கு எதிர்க்கருத்துள்ள சொல்லைக் காட்டுக.

22. ஆசிரியர் எல்லோரிடமும் கேள்வி கேட்டார்.

(a) வேள்வி
(b) பதில்
(c) வினா
(d) கேட்டல்

23. நான் வீட்டுக்கு வரும் போது கதவு திறந்து இருந்தது.

(a) மூடி
(b) பரந்து
(c) சரிந்து
(d) முடிந்து

24. நத்தார் நாட்களில் உலகத்தின் வடக்கு பகுதி குளிராக இருக்கும்.

(a) கிழக்கு
(b) தெற்கு
(c) சூடு
(d) மேற்கு

Read and understand the text "அன்னம் வரைதல்" and answer the questions 25 to 28.
"அன்னம் வரைதல்" பற்றிய குறிப்புகளை வாசித்து அவற்றில் இருந்து பெறப்படும் தகவல்களைக் கொண்டு 25 முதல் 28 வரையுள்ள வினாக்களுக்கு விடையளிக்கவும்.

# அன்னம் வரைதல்

**தேவையான பொருட்கள் :**

1. காகிதம்
2. சிவப்பு, கறுப்பு நிற பென்சில்கள்
3. வரையும் பென்சில்

**வழிமுறை :**

| | |
|---|---|
| 1. 2 வரைக. |  |
| 2. இன்னொரு கோடு கீறி 'கழுத்து' போல் வரைக. |  |
| 3. சிறகுகளையும் பின் இறகையும் வரைக. |  |
| 4. உடம்பை உருவாக்கும் கோட்டை வரைக. |  |
| 5. சொண்டு, கண் வரைந்து இறக்கைகளையும் வரைக. |  |
| 6. சொண்டுக்கு சிவப்பும் உடம்பிற்கு கறுப்பு நிறங்களும் தீட்டுக. |  |

இந்த அன்னத்தை ஆறு படிகளில் உள்ள முறைப்படி வரையலாம்.

25. நான்காவது படியில் என்ன வரையப்பட்டது?

(a) கழுத்து
(b) சொண்டு
(c) உடம்பு
(d) அன்னம்

26. சொண்டு என்ன நிறமாக இருக்கும்?

(a) நீலம்
(b) நீண்டு
(c) சிவப்பு
(d) கறுப்பு

அடுத்த பக்கத்தில் தொடரும்.

7. சிறகோடு சேர்ந்து என்ன வரையப்பட்டது?

(a) கழுத்து
(b) உடம்பு
(c) பின் இறகு
(d) கால்

28. அன்னம் வரைவது

(a) இலகுவானது
(b) நீந்திச் செல்லும்
(c) தெரியாது
(d) அகலமானது

For questions 29 to 32 choose the response that combines the sentences in the best way.
29 முதல் 32 வரையான வினாக்களில் தரப்பட்ட வசனங்களை சரியான ஒழுங்கில் அமைத்துக் காட்டுக.

29. (1) பின்னர், உள்ளே விளையாடினான்.
(2) பாலன் வெளியில் விளையாட நினைத்தான்.
(3) எனவே வெளியில் விளையாட முடியாது.
(4) அப்பொழுது மழை பெய்தது.

(a) (2), (3), (1), (4)
(b) (3), (2), (1), (4)
(c) (2), (4), (3), (1)
(d) (1), (2), (3), (4)

30. (1) முதலில் துறைமுகப் பாலத்தைப் பார்த்தான்.
(2) அங்கிருந்து சிட்னி நகரைப் பார்த்து மகிழ்ந்தான்.
(3) கபிலன் சிட்னி நகரைப் பார்க்கச் சென்றான்.
(4) அடுத்ததாக மிக உயர்ந்த கட்டடத்திற்கு சென்றான்.

(a) (1), (2), (3), (4)
(b) (3), (1), (4),( 2)
(c) (3), (2), (4), (1)
(d) (4), (3), (2), (1)

31. (1) பின்பு பூக்களுக்கு வண்ணம் தீட்டினாள்.
(2) கமலா ஒரு மட்டையை எடுத்தாள்.
(3) அந்த வண்ணங்கள் நிறைந்த படத்தை சுவரில் மாட்டினாள்.
(4) அதில் பல பூக்கள் வரைந்தாள்.

(a) (3), (4), (2), (1)
(b) (2), (3), (1), (4)
(c) (2), (1), (4), (3)
(d) (2), (4), (1), (3)

32. (1) பின்பு நாங்கள் எல்லாரும் கோவிலுக்குப் போனோம்.
(2) ‘‘அப்படியானால் நாங்கள் கோவிலுக்குப் போவோமா’’ என்றேன் நான்.
(3) நான் கேட்டவுடன், சரி எல்லாரும் கோவிலுக்குப் போவோம் என்றார் அப்பா.
(4) ‘‘இன்று கோயிலில் விசேஷ பூசை’’ என்றார் அம்மா.

(a) (4), (2), (3), (1)
(b) (3), (4), (1), (2)
(c) (3), (4), (2), (1)
(d) (1), (4), (3), (2)

For questions 33 to 36 choose the correct word to complete the sentence.
33 முதல் 36 வரையுள்ள வினாக்களுக்கு மிகவும் பொருத்தமான சொல்லைத் தெரிவு செய்து வசனத்தை முடித்துக் காட்டுக.

33. சாப்பிட்டு முடிந்ததும் அவர்களின் பசி ________________________________ .

(a) தீர்கிறது
(b) தீர்ந்தோம்
(c) தீர்ந்தது
(d) தீர்த்தார்கள்

34. நாங்கள் அப்பா, அம்மா சொற்படி ____________________________________ .

(a) நடக்கிறார்கள்
(b) நடப்போம்
(c) நடப்பீர்கள்
(d) நடந்தார்கள்

35. நாளை எங்கள் வீட்டுக்கு நீங்கள் ____________________ என்று மாமா கூறினார்.

(a) வந்தீர்கள்
(b) வருவீர்கள்
(c) வருவார்கள்
(d) வந்தார்கள்

36. ‘‘எனக்கு ஒரு வடை _____________________’’, என காகம் பாட்டியைக் கேட்டது.

(a) தந்தாய்
(b) தா
(c) தருவோம்
(d) தந்தேன்

Read the text "பாரதி" and answer questions 37 to 40.

"பாரதி" என்பதை வாசித்து 37 முதல் 40 வரையான வினாக்களுக்கு விடையளிக்கவும்.

## பாரதி

பாரதியார் சிறந்த புலவர். அவரை "பாட்டுக்கொரு புலவன்" எனப் பெரியோர் போற்றுவர். அவரின் பாடல்களே "பாரதியார் பாடல்கள்" எனப் பெயர் பெற்றன.

இப்பாடல்கள் தமிழின் இனிமையைக் கூறுகின்றன. தமிழரின் சிறப்பைக் காட்டுகின்றன. நாட்டு விடுதலையை வேண்டுகின்றன. பக்தியை பரப்புகின்றன. அது மட்டுமா? சிறுவர்களாகிய எங்களுக்கும் புத்தி சொல்கின்றன. "ஓடி விளையாடு பாப்பா" என்ற பாடல் எமக்கு உற்சாகத்தைத் தருகின்றது. பாரதியார் பாடல்கள் இனிமையானவை. அவற்றை படித்து சுவைக்கலாம். கேட்டு சுவைக்கலாம். பாடிச் சுவைக்கலாம். சில பாடல்களுக்கு நடனம் கூட ஆடலாம்.

37. 'பாட்டுக்கொரு புலவன்' யார்?

(a) பெரியோர் (b) புலவன்
(c) பாரதியார் (d) தமிழர்

38. சிறுவருக்கு பாரதியார் எழுதிய பாட்டு எது?

(a) தமிழ் இனிமையைக் கூறுவன
(b) தமிழரின் சிறப்பைக் காட்டுவன
(c) ஓடி விளையாடு பாப்பா
(d) நடனம் ஆடும் பாட்டு

39. பாரதியார் பாட்டுக்கள் சிறுவர்களுக்கு என்ன சொல்கிறது?

(a) இனிமை
(b) புத்தி
(c) தமிழ்
(d) விடுதலை

40. பாரதியார் யார்?.

(a) வைத்தியர்
(b) விளையாட்டு வீரர்
(c) புலவர்
(d) நடன ஆசிரியர்